# கல்வித்துறையில் ஏற்றத்தாழ்வு

*கலாநிதி விக்கிரபாகு கருணாரட்னா*

பொதுவாக கல்வி வசதியை அரசே மேற்கொள்கிறது. இதன்மூலம் இலவசக்கல்வி வழங்கப்படுகிறது. கல்விக்கு அரச உதவி என்பது இலவசக் கல்வியில் ஒரு அம்சமாகும். ஆனால் அது மட்டும் முக்கியமானதாக கொள்ள முடியாது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமுதாயத்தில் கூட கல்வியில் திறைமையானவரை தேர்ந்தெடுப்பதற்கான பொறிமுறைகள் உள்ளன. இதன்மூலம் தகுதியான இளைஞர்கள் தெரிவாகும். ஏது நிலை உள்ளது. தனிப்பட்ட ஒருவரின் திறைமை தொடர்பான தெரிவில் குடும்ப செல்வாக்கு செல்வாக்கு செலுத்துவதை தடுக்கும் நிலைமை முதலாளித்துவ சமுதாய அமைப்பில் காணப்படுகிறது. திறமையானவரை தெரிந்தெடுக்கும் தன்மை, குடும்ப அதிகாரத்தில் இருந்து வேறாக வளர்த்து எடுக்கப்பட்டு வரப்படுகிறது. ஒருவர் தனது விருப்பத்துக்கு ஏற்றவாறு. தனது திறமையின் அடிப்படையில் சுகந்திரமாக முன்னேறக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இத்தகைய போக்கு சோசலிச முறைமையில் அத்தியாவசியமான ஒன்றென கருதப்படவில்லை. இத்தகைய நோக்கு ஜனநாயக முதலாளித்துவ சமுதாயத்தில் காணப்படுகிறது.

இத்தகைய போக்கின் அடிப்படையில் சுகந்திரத்துக்கு பின்னர் இலங்கையில் இலவசக்கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த காலப்பகுதியில் அரசாங்கப் பாடசாலைகளும், தனியார் பாடசாலைகளும் காணப்பட்டன. அங்கே ஒருவர் பொதுப்பரீட்சையில் சித்தியடைவதன் மூலமே மேற்கொண்டு உயர்கல்வியை தொடர்வதற்கான நிலமை காணப்பட்டது. பொதுப் பரீட்சையில் என்ன அடிப்படையில் சித்தி அடைந்தார் என்பதைக் கொண்டே அவரின் அடுத்த தேர்வான உயர்கல்வியோ வேலைவாய்ப்போ பெறுவதற்கான தேர்வுக்கு உள்ளாவார். தனியார் துறை கூட இந்த முறைமைக்கு மதிப்பளித்து இருந்தது.

**குறிப்பு**

இலங்கை பல்கலைக்கழகம் உருவாகிய பின்னர் அங்கே தெரிவு பரீட்சை இடம் பெற்றிருந்தது. பின்னர் இது கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை என மாறியது. அரசாங்கப் பாடசாலையிலோ தனியார் பாடசாலையிலோ ஒருவர் கல்வி கற்று இருந்தாலும், இந்த உயர்தர பரீட்சையில் சித்தி அடைந்தாலே பல்கலைக்கழகம் செல்ல முடியும். இங்கே சித்தி பெற்றவரின் திறமையின் நிலையை கணிப்பிட்டு அவருக்கு உரிய உயர்கல்வி வாய்ப்பு வழங்கப்பட்டது. ஒரு மாணவன் திறமையானவராக இருந்தால் அவரது குடும்பப்பின்னணி எதுவாக இருந்தாலும் மதிப்பு கணிக்கப்பட்டது. நான் 1960ம் ஆண்டு உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தேன் அந்த காலப்பகுதியில் ஆனந்தா கல்லூரி பௌத்த நிறுவனத்தினால் நடத்தப்பட்டது நிச்சயமாக அங்கே அரச உதவி கிடைத்து வந்தது.

மேலும் எமது அதிபர் மேதானந்தா சிங்களபௌத்த பிரச்சாரங்களில் பிரதானமானவராக இருந்தார். அந்த காலப்பகுதியில் ஒரு பாடசாலையை அரச சார்பற்ற நிறுவனம் நடத்தி வந்தது. அங்கே ஒருவர் நான்கு பாடங்களிலும் சித்தி பெற்றதால் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில உத்தர வாதம் இருந்தது. சில பட்டப்படிப்புக்களுக்கான கல்வி வசதிகள் நாடு முழுவதும் உள்ள பிரதான பாடசாலைகள் ஊடாக வழங்கப்பட்டது பாடசாலைக்கு வெளியே ரியூசன் எடுக்கும் நிலை குறைவாகவே இருந்தது. இங்கே பின்தங்கிய சமுதாயத்தில் கல்வி என்பது வரப்பிரசாதமாக காணப்பட்டது.

கல்வி பகுதியின் ஏற்பாடுகளில், ஓரளவு நியாயமான முயற்சிகளின் அடிப்படையில் அரச வசதிகளை ஏழைகள் பெறக்கூடியதாக இருந்தது. அக்காலப்பகுதியில் ஒருவர் நன்றாக சித்தியடைந்திருந்தால் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்விகற்க வசதி இருந்தது. மற்றவர்கள் லண்டன் பல்கலைக்கழகங்களின் பரீட்சைகள் இங்கு இருந்தது செய்யும் நிலை இருந்தது. இன்று வரை இது இலவசக் கல்வியாக கருதப்படுகின்றது. ஏனென்றால் உயர்தர பரீட்சை முடிவு உயர்கல்விக்கான தெரிவில் முடிவு முக்கிய தீர்மானம் எடுக்கும் நிலைக்குரிய காரணியாக உள்ளது. இன்றுள்ள வேறுபாடு என்னவென்றால் உயர்தரப்பரீசை வலிது முன்பு போல இருந்தாலும் 120000 பேர் பரீட்சையில் சித்தி பெற்றால் 20,000 பேருக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது. கடந்த நான்கு தசாப்தகாலமாக இலங்கை பல்கலைக்கழகங்களில் திறமைக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. தற்போது உயர்தர பரீட்சையில் சித்தி பெற்றாலும் அதி திறமையை கொண்டு இருந்தாலும் பல்கலைக்கழகம் செல்லும் நிலை முடியாத ஒன்றாக உள்ளது இத்தகைய சூழ்நிலையில் தனியார் பல்கலைக்கழங்கள் ஏற்படுத்தப்பட்டால் நிலமை மேலும் மோசமடையும். தகுதி அற்றவர்களுக்கு அளவுக்கு அதிகமான சந்தர்ப்பங்களையும், தகுதி உடையவருக்கு எத்தகைய நன்மையும் வழங்காத நிலையும் ஏற்படும்.

தனியார் பல்கலைக்கழகங்கள் இதனால் உருவாக்கப்பட்டால் மோசம் படுமோசமாக மாறும் நிலை காணப்படும் உயர்கல்வி அமைச்சர் தனியார் பல்கலைக்கழகங்கள் உயர்கல்வி கற்க தகுதியான மாணவர்கள் 20% விகிதத்திற்கு தகுதியான உள்நாட்டு மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்குவதாக உறுதி அளித்துள்ளதாக கூறுகிறார். இது ஒரு ஏமாற்றுக் கருத்தாகும். ஆனால் அமைச்சர் நடைமுறையில் இருக்கும் இலவசக் கல்வி முறையை அழிவில் இருந்து காப்பாற்ற முடியாமல் இருப்பதாக கூறுகின்றனர்.

தகுதி உடையவர் பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்தால் தனியார் பல்கலைக்கழங்களில கல்வி கற்பதில் தடைஏதும் இருக்கதேவையில்லை. 1960ம் ஆண்டு காலப்பகுதி என்றால் தனியார் பல்கலைக்கழகம் இருப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் தகுதி அடிப்படையில் தெரிவாவதை இல்லாமல் செய்து விட்டு கல்வி முறைமை மேற்கொள்ளப்பட்டால் நாட்டில் பாரிய பிரச்சனைகள் உருவாகும்.

பிரித்தானிய பெற்றோலிய நிறுவனம், மெக்சிக்கோ வளைகுடாவில், கடல்நீருக்கு அடியில் மேற்கொண்ட தகர்ப்பு நடவடிக்கை பாரிய அழிவுக்கு அடி கோலியுள்ளது. இந்த அனர்தத்தினால் ஏற்பட்ட எண்ணெய் கசிவு நாள் ஒன்றுக்கு 1000 பீப்பாய்கள் என முதலில் கூறப்பட்டது, பின்னர் 12000 இருந்து 24000 பீப்பாய்கள் என கூறப்பட்டது. தற்போது இதைவிட கூடுதலாக இருக்கும் என கூறப்படுகிறது. ஏற்கனவே கசிந்து கடல்நீரில் கரைந்துள்ள எண்ணெயின் அளவு 0.55 இருந்து 1.16 பில்லியன் பீப்பாய்கள் என கணிப்பிடப்பட்டுள்ளது ஆனாலும் விஞ்ஞானிகளின் கருத்தின் பிரகாரம் 2.36 பில்லியன் பீப்பாய் எண்ணெய் கலந்திருக்கும் என கூறப்படுகிறது. இத்தகைய பாரிய அனர்த்தம் இதற்கு முன்பு நடைபெறவில்லை என்றும் 1989 மார்ச் 24ல் எக்சோன் வல்டென் அனர்த்தத்தில் 0.260 பில்லியன்கள் .பரல்கள் கசிவு ஏற்பட்டதாக தெரிகிறது ஆனாலும் மெக்சிக்கோ வளைகுடாவில் ஏற்பட்டது. இதைவிட பந்து மடங்கு அதிகம் என்றே கூறப்படுகிறது. இந்த அனர்த்தத்தால் 200 கிலோ மீற்றர் நீளமும் 110 கிலோ




மீற்றர் அகலமும் கொண்ட கடற்பரப்பு பாரிய அழிவுக்கு உள்ளாகி உள்ளது. இங்கே உள்ள அரிய வகை கடல்வாழ் உயிரினங்கள் அழிவுக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில் பறவைகள், கடல் மீன் வகைகள் அழிவுக்குள்ளாகி உள்ளன.

ஒருவித உணவு வட்டத்தில் வாழும் அரியவகை உயிரினங்களை இந்த அனர்த்தம் அழிவுக்கு உள்ளாக்கும் என அச்சம் ஏற்பட்டுள்ளது.

முதலாளித்துவ முறைமை எதிர்கால சமுதாயம் பற்றியோ, சுற்றுப்புறச்சூழல் பற்றியோ கவனத்தில் கொள்ளாத நிலை காணப்படுகிறது. இலாபம் ஒன்றே அவர்களின் இலக்காக உள்ளது. சமூகத்தை பற்றியோ சமூகதேவைகள் பற்றியோ இவர்கள் கவலைப்படுவதில்லை. ஈகுவோடர் நாட்டில் 19 பில்லியன் இரசாயன கழிவுகள் புதைக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது இது போன்று பல்வேறு நாடுகளில் இரசாயன கழிவுகள் புதைக்கப்படுகின்றன இவற்றால் ஏற்படக் கூடிய விளைவுகள் கற்பனை செய்து பார்க்க முடியாதளவுக்கு உள்ளது. மெக்சிக்கோ வளைகுடாவில் பிரித்தானிய பெற்றோலிய கம்பனிக்கு இத்தகைய முயற்சிகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டமை தொடர்பான சர்ச்சைகள் தோன்றியுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மீது சந்தேக பார்வைகள் படர தொடங்கியுள்ளது. முதலாளித்துவம் உயிர்வாழ சுரண்டல் அவசியமானதாகும். சிறிய தொகையினரான செல்வந்தர்கள் மக்களை, இயற்றையை வதைத்து தமது செல்வத்தை திரட்டுகின்றனர் இலாபம், அதிக இலாபம் என்ற இலக்கை நோக்கி இவர்களின் நகர்வு அமைவதால், பாதிக்கபடுவது மனித இனமும், இயற்கையுமே.

எனவே வெகுஜனங்கள் குறிப்பாக மீனவ சமுதாயம், விஞ்ஞானிகள் சுற்றுப்புறச்சூழல் ஆர்வலர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள், புரட்சீகர சக்திகள், கலைஞர்கள் புத்திஜீவிகள் மற்றும் இத்தகைய அழிவுகள் விரும்பாத அனைவரும் ஒன்றிணைந்து இந்த அழிவுக்கு எதிராக காத்திரமான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தயாராகவேண்டும் இலங்கையிலும் மன்னார் வளைகுடாவிலும் நீருக்கடியில் பெற்றோல் எடுக்கும் முயற்சிகளுக்கு இலங்கை அரசாங்கம் முயன்று வருகிறது. மெச்சிக்கோ வளைகுடாவில் ஏற்பட்டிருக்கு அழிவின் அனுபவம். எமது நாட்டுக்குப் பொருந்துவதாக அமையும் எனவே நாம் விழிப்புடன் இருக்கவேண்டும் விஞ்ஞான ஆய்வு விஞ்ஞான வளர்ச்சி மனித சமுதாயத்தின் மேம்பாட்டுக்கும், இயற்கையை காப்பதற்கும் உதவியாக அமையவேண்டும். அதை தவிர்த்து அழிவுக்கு அடிகோலும் என்றால் அது தொடர்பான எச்சரிக்கை கொள்ளவேண்டியது எமது பொறுப்பாகும்.

3 வது பக்க தொடர்ச்சி......

## உலகமயமாக்கலுக்குஎதிராக......

மேலோட்டமான தீர்வையே ஆதரிக்கின்றன. அடிப்படையிலான தீர்வை அவர்கள் ஆதரிக்கவில்லை தமிழ் மக்களுக்கு உரிய பகுதியில் சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அது வழங்கப்படாமல் மேலோட்டமான தீர்வு வழங்கப்படும் போது அது உயர்தரத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவு செய்யலாம். ஆனால் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனைக்கு அது தீர்வாக ஒருபோதும் அமையாது. இன்று தென் இலங்கை என்றாலும் வடக்கு கிழக்கு என்றாலும், அளப்பரிய தியாகத்துடன் போராட்டம் இடம்பெற்றது. அது கௌரவப்படுத்தப்பட வேண்டும். அந்த போராட்டங்களுக்கு கௌரவம் வழங்கப்பட வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கு இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினர் என்பதற்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். அவர்களின் போராட்டத்தை பயங்கரவாதம் என்பது கூறி ஒதுக்கிவிட்டு, சொற்ப நஸ்ட ஈடை குடும்பங்களுக்கு வழங்கும் எண்ணப்பாடுகளை ஒருபோதும் ஆதரிக்க முடியாது. உலகம் முழுவதும் உலகமய மாக்கலுக்கு எதிரான போராட்டங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன இத்தகைய போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதே ஏகாதிபத்திய சக்திகளின் நிலைப்பாடாக உள்ளது. இந்திய பூர்வீக மக்களின் போராட்டத்தை விமானப்படை மூலம் குண்டு பொழிந்து அழிக்க இந்திய ஆட்சி முன் வந்தது. ஆனால் விமானப்படை அதற்கு தயார் இல்லை என மறந்துவிட்டது.

எனவே எமது நாட்டில் அடிப்படை பிரச்சனை இரண்டையும் முன்னெடுக்கும் போராட்டங்களை முன்னெடுப்பதே எம்முன் உள்ள தேர்வாகும்.